[1972 ஆகஸ்டு 9

## கோடம்பாக்கம் புதூருக்கு வசதிகள்

* 21. வினா—திரு. நா. வெ. குருசாமி : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை கோடம்பாக்கம் புதூர் ( Part II ) பிரிவில் (கலைஞர் கருணாநிதி நகர்) சென்னை வீட்டுவசதி வாரியத்தில் ஒதுக்கப்பட்ட மனைகளில் வீடுகட்டி குடியிருப்போர்களுக்கு ஒரு வருடத்திற்கு மேலாகியும், குடிதண்ணீர், மின்சாரம் போன்ற வசதிகள் செய்து தராமல் இருப்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் பேரில் அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** (அ) & (இ) சென்னை கோடம்பாக்கம் புதூர் ( Part II ) பிரிவில் (கலைஞர் கருணாநிதி நகர்) வசிக்கும் சுமார் 300 குடும்பங்களுக்கு தற்போது குடிநீர் அளிக்கப்பட்டு வருகிறது. இந்தப் பகுதியில் அதிகப்படியான நில நீர் ஊற்றுக்கள் இல்லையாதலால் விருகம் பாக்கம் போரூர் ஏரிக்கரைப் பகுதியில் உள்ள நில-நீர் ஊற்றுக்களிலிருந்து தூய்மையான குடிநீர் இந்நகரில் வசிப்பவர்கள் எல்லோருக்கும் கூடிய விரைவில் அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. மின் வசதி அளிப்பதற்கான ஏற்பாடுகளை மின்சார வாரியம் செய்து வருகின்றது. இன்னும் மூன்று அல்லது நான்கு மாதத்திற்குள் எல்லா வீடுகளுக்கும் மின்வசதி கிடைக்கக்கூடும்.

## நகராட்சிகளும், பேருந்துப் போக்குவரத்தும்

* 22 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் எந்தெந்த நகராட்சிகள் டவுன் பஸ் விட வேண்டுவதற்கான அனுமதி கோரி அரசிடம் விண்ணப்பித்துள்ளன?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** விண்ணப்பம் ஏதும் முடிவுறு நிலையில் இல்லை. நகரப் பேருந்துப் பணிகளை நடத்த நகராட்சிகளுக்கு அனுமதி வழங்குவதில்லையென்பது அரசின் கொள்கையாகும்.

## சென்னை—நாகப்பட்டினம் வழித்தடத்தில் இரவு நேரப் பேருந்து

* 23. வினா—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவிற்கு விடையளிப்பாரா—

சென்னை—நாகப்பட்டினம் பேருந்து தடத்தில் இரவு நேர துரித வண்டி ( Express ) விடும் நோக்கம் அரசுக்கு உள்ளதா ?